# வனச் செல்வம்



... ச் செய்தித் துறை

# வனச் செல்வம்

©
தமிழ்நாடு அரசாங்கம்
1961

தமிழ்நாடு அரசாங்கச் செய்தித் துறை வெளியீடு

விலை: 10 காசுகள்.

முதற் பதிப்பு : ஜூன் 1961.

# முன்னுரை

காடும், காடு சார்ந்த இடமும் முன்னாட்களில் "முல்லை" எனக் குறிக்கப் பெற்றன. காடுகளின் இன்றியமையாச் சிறப்பைத் தமிழர் தெளிவாக உணர்ந்திருந்தனர். அதனால் அவர்களது வாழ்க்கையிலும் வளம் பெருகிக் காணப்பட்டது.

காடுகள் மழை வளஞ் சிறக்க உதவுகின்றன; வெள்ளங்களைத் தடுக்கின்றன; வாணிபப் பொருள்களை அளிக்கின்றன; வன விலங்குகளைப் பாதுகாக்கின்றன. சில நூற்றாண்டுகளுக்கு முன்புவரை, தமிழ் நாட்டில் அடர்ந்த காடுகள் இருந்து வந்தன. காட்டுப்பாக்கம், மறைக்காடு, திண்டிவனம், ஆர்க்காடு, ஆலங்காடு, வேற்காடு முதலிய ஊர்ப் பெயர்கள் இந்த உண்மையினை நிலை நாட்டுகின்றன. நாகரிகப் பாங்கும், அந்நிய ஆட்சியின் புறக்கணிப்பும் இக்காடுகள் அழிந்து வரக் காரணமாயின. வனக் குறைவினால் வளங் குறைவதும் இயல்பாயிற்று.

நாடு விடுதலை பெற்ற பின்னர், வன வளர்ப்பில் நல்ல கொள்கைகள் பின்பற்றப்பட்டன. முதலிரு திட்டங்களுக்கும் செலவு சுமார் ரூ. 180 லட்சம். மூன்றாந் திட்டத்தில் ரூ. 320 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதலிரு திட்டங்களிலும் விளைந்த முன்னேற்றங்களும், மூன்றாந் திட்டக்கால உத்தேசச் சாதனைகளும் இச்சிறு நூலில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. அவை தமிழ்ப் பெரு மக்களுக்குப் பயன்படும் என்று நம்புகிறோம்.

நெறியாளர்,
தமிழ்நாடு அரசாங்கச் செய்தித் துறை.

சென்னை–9, ஜூன், 1961.

# வனச் செல்வம்

## எவை காடுகள்? ஏன் அவை வேண்டும்?

ஊர்களுக்கும் உழவு நிலங்களுக்கும் புறம்பேயுள்ள நிலம், மரங்கள் நிறைந்த சோலை, அரசாங்கப் பாது காப்பிற்குள் அடங்கிய, கொடிய விலங்குகளும் புதர்களும் மலிந்த இடம் ஆகியவை காடு என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றன.

இக்காடு என்னுஞ் சொல் பல மொழிகளில் பல பொருள்களில் வழங்குகிறது. காட்டியல் அறிஞர்கள் பலரும் பல பொருள்கள் கூறியுள்ளனர். "காடு என்பது, மரங்களும், மற்றக் காட்டுப் பொருள்களும் விளைவதற்கென்றோ, ஊறு விளைக்கும் தட்ப வெப்ப நிலைகளிலிருந்து அருகிலுள்ள நிலத்தைக் காப்பாற்று வதற்கென்றோ ஒதுக்கி வைக்கப்பட்ட இடம்" என்று உரைப்பர் டாக்டர் ஸ்கிலிச் என்னும் காட்டியல் அறிஞர்.

வெறும் மரங்களை வளர்க்க மட்டும் ஒதுக்கி வைக்கப்படும் நிலப் பரப்பன்று காடு. அது நமக்குப் பல நன்மைகளைத் தருகின்றது. விறகு, கரி, மூங்கில், வேர், காய்கனிகள் முதலான அரும் பொருள்களை நல்குகின்றது. தமிழகத்துக் காடுகளில் கிடைக்கும் விளைபொருள்களை இரு பிரிவுகளாகப் பகுத்துக் கூறுவர். தேக்கு, நூக்கு, சந்தனம், ஏனைய விறகு மரங்கள் முதலியவற்றைப் பெரும் விளைவுப் பொருள் களாகவும், தேன், அரக்கு, தந்தம், கொம்பு, தோல், தாவரங்களின் வேர், பட்டை, நார், காய்கனிகள் முதலியவற்றைச் சிறு விளைவுப் பொருள்களாகவும் சொல்லலாம்.

காடுகளின் நன்மைகள் இவற்ருேடு முடிந்து விடவில்லை. அவை தட்ப வெப்ப நிலையைச் சமப் படுத்துகின்றன. காற்றினுலும், மழையினுலும் ஏற்படும் மண் அரிமானத்தைத் தடுக்கின்றன; ஈரத்தைத் தங்கச் செய்கின்றன; நிலவளங்களை நிலை நிறுத்துகின்றன. இத்தகைய நன்மைகள் மனிதனின் வாழ்க்கையிலும், தொழிலிலும் பெரும் முன்னேற் றங்களை உண்டாக்குகின்றன. எனவே, காட்டுச் செல்வத்தைக் காப்பாற்றி வளர்க்க அரசாங்கம் முனைந்து நின்று பாடுபடுகின்றது. காடுகளை ஒழுங்காகப் பேணி வளர்த்து வந்தால், செலவு செய்த முதலீட்டுக்கு மேல் பலனும் நன்மையும் தொடர்ந்து ஏற்பட்டு வரக்கூடும்.

ஒரு நாட்டின் நிலவளம் அந்நாட்டின் நீர் வளத்தைப் பொருத்துள்ளது என்பது தெளிவான ஓர் உண்மையாகும். தமிழ் நாட்டில் அணைகள் கட்டப் படுவதற்கு முன்பு காம்பாக இருந்தவை இன்று கதிர் அசையும் கழனிகளாகக் காட்சி தருகின்றன. தமிழ் நாட்டிற்குப் பெரும்பாலும் மழையின் மூலமும், மழையாலும், சுனையாலும் நீர் பெறும் ஓடைகள் மூலமுமே நீர் கிடைக்கிறது. மழையின் அளவோ காட்டின் அளவைப் பொருத்துள்ளது. இதிலிருந்தே காட்டின் இன்றியமையாமையை உணர்ந்து கொள்ளலாம். இவ்வாறு காடுகளுக்கும் மழைக்கும் உள்ள தொடர்பு பற்றி அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகள் ஆகிய இடங்களில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுல் அறியப்பட்ட உண்மைகள் பின்வருமாறு :—

காடுகள்—

1. தட்ப வெப்ப நிலையை மிதப்படுத்த உதவு கின்றன.

2. காற்றின் ஈரப் பதத்தைப் பாதுகாக்கின்றன.
3. காற்றின் வேகத்தை மிகுதியாகக் குறைக்கின்றன.

நீரைச் சேமித்து வைப்பதற்குக் காடுகள் இயற்கைச் சாதனங்களாகப் பயன்படுகின்றன. மரங்களின் இலைகள் தழைத்து விதானம் போல் அமைந்து வெயில் நுழையாதபடி தடுக்கின்றன; கீழே விழுந்த இலைகள் மட்கிப் படைபோல் தரையை மூடிக் கொள்கின்றன. இவற்றால், தரையில் ஊறியுள்ள நீர் ஆவியாக மாறாமல் தடுக்கப்படுகிறது. மரத்திலிருந்து உதிரும் சருகுகள் மட்கித் தரைமீது திண்மையும் மிருதுவுமான கம்பளம் போல் ஆய்விடுகின்றன. இந்த மட்கு அதிகமான நீரை ஏற்று வைத்துக் கொள்ளும் தகுதியுடையது. இது ஏற்றுக் கொள்ளும் மழைநீர் மண்ணுக்குள் ஊறுகின்றது. பிறகு, ஊறிய நீர் கோடைக்காலத்தில் வெளியேறாதபடி இந்த மட்கு தடுத்து விடுகின்றது. அதனால், சிறிதே மழை பெய்தாலும் சுனைகள் உண்டாகி விடுகின்றன. காடுகள் நிழல் தருவதாலும், வெப்பக் காற்றுக்களைத் தடுத்து விடுவதாலும் சுனைகள் விரைவாக வறண்டு போவதில்லை. அது போலவே, குளங்களைச் சுற்றிலும் காடுகள் இருந்தால், அவையும் வெப்பக் காற்றுக்களைத் தடுத்துக் குளத்திலுள்ள நீரை ஆவியாக மாறவொட்டாமல் பாதுகாக்கின்றன.

சில மர இனங்கள் அதிகமாக நீரை வெளியிடும். இத்தகைய மரங்கள் சதுப்பு நிலங்களை வேளாண்மை நிலங்களாக மாற்ற உதவுகின்றன.

வெள்ளங்களைத் தடுப்பதிலும் காடுகள் வல்லவையாய் விளங்குகின்றன. கட்டாந்தரையாக இருக்கும்

இடங்களில் மழை பெய்தால், நீர் ஊறமுடியாமல் ஓடிப்போகும். அதன் மூலம், அருகிலுள்ள ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்படும். மக்களின் உயிருக்கும் பொருளுக்கும் அழிவுண்டாகும். அதற்கு மாறாக அவ்விடங்களில் காடுகள் இருந்தால், நீர் ஊறிப் போக ஏதுவாகும். வெள்ளங்கள் ஏற்பட்டு அழிவும் நேரிடாது.

காடுகளின் மற்றொரு சிறந்த பயன், அவை மண் அரிமானம் ஏற்படாமல் காக்கின்றன என்பது. காற்றோ அல்லது நீரோ, ஓரிடத்திலுள்ள மண்ணை மற்றோரிடத்திற்குக் கொண்டு போகுமானால், அதை மண் அரிமானம் என்று கூறுவர். இவ்வாறு மண் அரிமானம் ஏற்படுவதால் ஒன்று, மண் இளக்கப் படுகிறது; இரண்டு, மண் கொண்டு போகப்படுகிறது. இவ்வாறு நேராமல் தடுக்கக் காடுகள் வளர்க்கப்பட வேண்டும்.

## நமது மாநிலக் காடுகள்.

ஒரு நாடு வேளாண்மைத் துறையிலும், தொழில் துறையிலும் பொருளாதாரத்திலும் வளங்கொழித் ததாகத் திகழ வேண்டுமானால், அந்த நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 33·3 சதவீதம் காடுகளாக இருக்க வேண்டும். இதனைத் தேசிய வனக் கொள்கை வலியுறுத்துகின்றன. நமது தமிழ் மாநிலத்தில் இப்பொழுது 6,718 சதுர மைல் பரப்பளவுள்ள ஒதுக்க காடுகள் உள்ளன. இவை தவிர சுமார் 1,550 சதுர மைல் பரப்பளவுள்ள முன்னாள் ஜமீன் காடுகளும் இருக்கின்றன. இவ்விரு வகைக் காடு களும் சேர்ந்து நமது மாநிலத்தின் மொத்த நிலப் பரப்பில் 17 சதவீதம் ஆகும். எனவே, நமது மாநிலத்தின் காடுகளை மேலும் வளர்க்க வேண்டியது மிக இன்றியமையாதது ஆகும்.

நமது நாட்டிலுள்ள காடுகளில் பெரும்பாலானவை ஆறுகள், குளங்கள், ஏரிகள் ஆகியவற்றின் படுகைகளிலே அமைந்துள்ளன. இந்தக் காடுகளில் விழும் மழைத் தண்ணீர் அவற்றை யொட்டியுள்ள ஆறு குளங்களில் போய்ச் சேருகிறது. இந்த நீர் நிலைகள் நமது மாநிலத்தின் சிறப்பான பாசன, மின்சாரத் திட்டங்களுக்கு உயிர் நாடியாய் இருக்கின்றன. ஆகவே, காடுகளைப் பாதுகாத்து வளர்க்க வேண்டியது நமது சிறப்பான கடனாகும். காடுகளின் பயன் இத்துடன் நின்று விடுவதில்லை. அவை நாட்டிற்குப் பாதுகாப்பாய் இருக்கின்றன. பண்டைத் தமிழகத்திலும், குறுநில மன்னர்கள் அடர்ந்து இருண்ட காடுகளை வளர்த்துப் பகைவர் எளிதில் தம் நாட்டிற்குள் நுழைய முடியாதவாறு தடுத்தனர். பல வகைப்பட்ட தொழில்களுக்கும் போக்குவரத்து வசதிகளுக்கும் சிலவகை மரங்கள் நன்கு பயன் படுத்தப்படுகின்றன. ஆகையினால், காடுகளைத் தேசியச் செல்வம் என்று புகழ்வதில் சிறந்த பொருளிருக்கிறது. காடுகள் அளிக்கும் மரங்கள் வீடுகளுக்குப் பயன்படுவதுடன் வாணிபத்தையும் தொழிலையும் பெருக்குகின்றன. நமது மாநிலத்தில், பழுத்த மரப்பட்டைகள் தொழிற்சாலைகளில் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், வீடுகளுக்கும் தொழில்களுக்கும் தேவையான விறகு, கால்நடைகளுக்கு வேண்டிய தீனி, மேய்ச்சல் நிலம், வீடுகள், வேளாண்மைக் கருவிகள் ஆகியவற்றிற்குத் தேவையான மரங்கள், உரத்திற்கான தழைகள், வேலிகளுக்கு வேண்டிய முட்கள், நாம் விரும்பி உண்ணக் கூடிய பல கனிகள் ஆகிய எண்ணற்ற சிறந்த நன்மைகளை நமக்குக் காடுகள் அளிக்கின்றன.

நாகரிக வளர்ச்சியால் அளவிறந்த காடுகள் அழிக்கப்பட்டு விட்டன. இதன் காரணமாக வனங்களில் வாழ்ந்து வந்த விலங்குகளும் அரிய பல பிராணிகளும் நசித்துப் போயின. இவை முற்றும் அழிந்து போகாமல் அவற்றுக்குப் புகலிடம் அளித்துப் பாதுகாத்து வருபவை காடுகளே. இந்தக் காரணத்தினலும் காடுகளை வளர்க்க வேண்டியது வலியுறுத்திக் கூற வேண்டிய கடமையாகிறது.

இரண்டு உலகப் பெரும் போர்களினல், கட்டிடம் முதலானவற்றுக்குப் பயன்படும் மரச்சாமான்களுக்கும், எரிக்க உதவும் விறகுக்கும் அதிகப் பற்ருக்குறை ஏற்பட்டது. இதனல் பல காடுகள் இரங்கத்தக்க நிலையில் அழிக்கப் பட்டுவிட்டன. எனவே, கட்டுப்பாடான முறையில் வனங்களைக் கண்காணித்து வளர்ப்பதுடன், பல வகை வனப் பொருள்களும் தடையின்றிக் கிடைக்கச் செய்வதற்கு இவ்வனங்களை விஞ்ஞான முறைப்படி பாதுகாத்து வருவதும் அவசியமாகும்.

போர்க் காலத்திற்கு முன்பு காடுகளின் சீரமைப்புக்குப் பல தனித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் அவற்றுக்குத் தக்க ஊக்கம் காட்டப் படவில்லை. நாட்டு விடுதலைக்குப் பின்னர், தேசிய வளம் கொழிக்கத் தீட்டப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலமாகவே காடுகளைப் பாதுகாத்து வளர்ப்பதில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. முதலாவது ஐந்தாண்டுத் திட்டமும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் காட்டு வளத்திற்குத் தெளிவான இலக்குகளை நிர்ணயித்தன. வெட்டப்பட்ட காடுகளை வளர்ப்பதற்கும், கட்டிட மரங்கள் விறகு ஆகிய வற்றைப் பெருக்குவதற்கும் காட்டுப் பொருள்களை

முற்றும் பயன்படுத்திக் கொள்வதற்கும் அவை பெரிதும் முயன்றன.

நமது மாநிலத்தின் வனத்துறையின் நிர்வாகத்தில் கீழ்க்கண்ட காடுகள் அடங்கியுள்ளன :—

1. ஒதுக்கப்பட்ட காடுகள்.
2. முன்னாள் பஞ்சாயத்து ஒதுக்கப்பட்ட காடுகள்.
3. முன்னாள் ஜமீன் காடுகள்.

வனத்துறையின் கண்காணிப்பிலுள்ள ஒதுக்கப்பட்ட காடுகள், சிறந்த முறையில் நல்ல கொள்கையின் அடிப்படையில் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளன. ஆனால், இரண்டாவது உலகப் போர் நிகழ்ந்த காலத்தில், அக்கால நிலையைச் சமாளிப்பதற்காக இக்கொள்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டன. இதன் காரணமாக வனங்கள் சீரழிந்தன. விரைவிலேயே இந்நிலைக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டியதாயிற்று. அரசாங்க காடுகளின் நிலையே இப்படியென்றால், தனியார் வசமுள்ள காடுகளின் நிலையைப் பற்றி விவரிக்கத் தேவையில்லை.

சமீபத்தில் வனத் துறையினால் மேற்கொள்ளப்பட்ட முன்னாள் பஞ்சாயத்துக் காடுகளும், முன்னாள் ஜமீன் காடுகளும் மிகவும் சீரழிந்த நிலையில் இருந்தன. அதற்குப் பல காரணங்களைச் சொல்லலாம். இக்காடுகளில் கட்டுப் பாடற்ற முறையில் ஆடு மாடுகள் மேய்க்கப்பட்டு வந்தன. கிராமத்தினரும் ஜமீன்தார்களும் அளவுக்கு மீறி மரங்களை வெட்டிச் சாய்த்து வந்தனர். செடி கொடிகளினால் ஏற்படும் பாதுகாப்புக் குறைந்து விட்டதால், மழையால் மண்ணரிப்பு அபாயம் ஏற்பட ஏதுவாயிற்று. எனவே, தவறான நிர்வாகத்தினால் வீணாக்கப்பட்ட தேசியச் செல்வத்தை மீண்டும் உருவாக்கும் முயற்சி மிக

அரிதான ஒன்றாக இருக்கின்றது. பழையபடி காடுகள் தழைத்துச் செழிப்பாக வளர்ந்து விளங்கு வதற்குச் செய்ய வேண்டிய முதல் காரியம், இப்பொழுது தொடர்ந்து பல ஆண்டுகளாகச் சீரழிக்கப்பட்டு வரும் மரங்களை மேலும் பயன் படுத்தாமல் விட்டு வைப்பதே.

## முதல் ஐந்தாண்டுத் திட்டச் சாதனை.

எல்லாப் பஞ்சாயத்து ஒதுக்கப்பட்ட காடுகளும், பல முன்னாள் ஜமீன் காடுகளும் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தினால் மறுமலர்ச்சி அடைந்தன. தவறான வழியில் பயன்படுத்தப்பட்டதாலும், அளவுக்கு அதிகமாக உபயோகப்படுத்தப்பட்டதாலும் இவை மிகச் சீரழிந்த நிலையில் இருந்தன. ஆகையினால், இவைகளிலிருந்து மேலும் மரம் வெட்டுவதைத் தவிர்க்கவும், அவற்றைப் பாதுகாக்கவும் நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மாநிலம் முழுவதும் வனங்களை மறுபடியும் வளர்க்கும் திட்ட மொன்று ஊக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி 1,400 ஏக்கருக்கும் அதிகமான நிலங்களில் முந்திரி பயிரிடப்பட்டது. 30,000 ஏக்கர் நிலங்களில் உலர்ந்த விறகு மர வகைகள் நடப்பட்டன; 2,700 ஏக்கர் நிலங்களில் மென் மரங்கள் பயிராக்கப் பட்டன; 2,800 ஏக்கர் நிலங்களில் வாட்டில் மரங்கள் நடப்பட்டன; 1,100 ஏக்கர்களில் புளுகம் மரங்கள் நடப்பட்டன. சந்தன மரங்களுக்குப் பேர் போன ஜவ்வாது மலைகளில் பாதைகள் சீரமைக்கப் பட்டன; நீலகிரி, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி தெற்கு ஆகிய பகுதிகளில் வேலைத் திட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டன. முன்னாள் பஞ்சாயத்து ஒதுக்கப்பட்ட காடுகள் பலவற்றிற்கு முதல் முறை யாகத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. முதல்

ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூபாய் 30·43 லட்சம் செலவிடப்பட்டது. இந்தக் காலத்தில் வனங்கள் பாராட்டத்தக்க அளவில் வளர்க்கப்பட்டனவென்று சொல்லுவதற்கில்லை. ஏனெனில், முதல் திட்டக் காலத்தில் அளிக்கப்பட்ட வசதிகளின் முழுப் பயனையும் அனுபவிக்க முடியாத நிலையில் வனத் துறை இருந்தது. அத்துடன், ஆண்டாண்டுகளாய்க் கருணையற்ற முறையில் அழிக்கப்பட்டு வந்த காடுகளை இவ்வளவு குறுகிய காலத்தில் வளம் பெறச் செய்வதும் இயலாததாகும். இத்தனை இடையூறுகள் இருந்த போதிலும் நமது மாநிலத்தின் வனங்களை உரிய முறையில் வளர்த்துச் செழித்தோங்கச் செய்வதற்குச் சரியான ஆரம்ப நிலையில் முதல் ஐந்தாண்டுத் திட்டம் தோற்றுவிக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை.

## இரண்டாந் திட்ட முன்னேற்றமும், மூன்றுந் திட்ட உத்தேச இலக்குகளும்.

நமது மாநிலத்தில் வெட்டுமர வகைகளும், மற்றக் காடு தரு பொருள்களும் தேவையான அளவில் இல்லை. அண்மையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியும் இதனைத் தெளிவாக்கியுள்ளது. ஆகவே, இவை மிக அதிகமான அளவில் கிடைக்கத்தக்க முயற்சிகளைப் பல வழிகளிலும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அப்படியும் குறுகிய காலத்தில் நாம் இப்பொருள்களில் தன்னிறைவு அடைய முடியாது என்று தோன்றுகிறது. ஆகவே, எந்தத் திட்டக் காலத்திலும், முன்னேற்றத்திற்கு வேண்டிய அளவில் வேலைத் திட்டங்களை வரையறுக்க முயலவில்லை. அதற்கு மாறாகக், கிடைக்கும் மனித சக்தியையும் நிதி வசதியையும் அடிப்படையாகக் கொண்டு திட்ட வேலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. நமக்கு நீண்ட

கால லட்சியங்களாக (1) எல்லா நிலங்களிலும் பாது காப்பளிக்கும் தாவர மரங்களைத் தேவையான அளவில் நடுதல், (2) தொழிலுக்கும் மற்றப் பொதுத் தேவைக்கும் வேண்டிய வெட்டுமரம், மூங்கில் போன்ற காடுதரு பொருள்களை அதிக அளவில் உண்டாக்குதல், (3) கிராமப் புறத் தேவைகளுக்கு ஏற்ற வகையில் காடுகளில் கிடைக்கும் பொருள்களில் தன்னிறைவு பெறுதல் என்பன விளங்குகின்றன.

இந்த லட்சியங்களை நிறைவேற்றும் பான்மை யிலேயே மூன்றாந் திட்ட உத்தேசங்கள் இருக் கின்றன. இரண்டாந் திட்டக் காலத்தில் நிறை வேற்றப்பட்டு வரும் காட்டு வளர்ச்சித் திட்ட வேலைகள் மூன்றும் திட்டக் காலத்திலும் தொடர்ந்து செயலாக்கப்பட்டு வரும். இப்பல்வேறு பணிகளுக் காகவும் சுமார் ரூ. 320 லட்சம் செலவழிக்க உத்தே சிக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் நிறைவேற்றப் படவிருக்கின்ற திட்டங்களுள் சிறப்பானது பண்ணைக்காடு வளர்ப்புத் திட்டம் ஆகும். காலக் கிரமத்தில் கிராமங்களுக்குத் தேவையான எரி பொருள், புல்வெளி, சிறு வகை வெட்டு மரங்கள் முதலியவை போதுமான அளவில் கிடைக்க இத் திட்டம் பெரு முயற்சி செய்கிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்கள் பலவற்றுக்கும் திட்டக்கால இறுதியில் சுமார் ரூ. 150 லட்சம் செல வாகும். இதில் ரூ. 70 லட்சம், பொருளாதாரச் சிறப் புள்ள மலைத் தோட்டங்களின் வளர்ச்சிக்குச் செல விடப்பட்டது. இத்திட்டங்களின் முன்னேற்ற நிலைகளும், மூன்றாந் திட்டக் காலத்தில் உத்தேசிக்கப் பட்டுள்ள வேலைத் திட்டங்களும் அடுத்த பக்கங்களில் விளக்கப்பட்டுள்ளன.

## 1. பண்ணைக்காடு வளர்ப்பு.

"மரம் நடு விழா" என்ற விழா ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது. மரங்களை நட்டு வளர்ப்பதில் மக்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் எழ இவ்விழா கொண்டாடப்படுகிறது. இதற்குமேல் இக்காரியத்தில் வேறு திட்டமிட்ட முயற்சி ஒன்றும் இதுவரை எடுக்கப்படவில்லை. அதனால், கிராமத் தரிசு நிலங்களில் மரங்களை வளர்க்கவும், பாதைகள் நெடுக நிழல்தரும் மரங்களை வளர்க்கவும், கால் வாய்க்கரை, வயலோரங்கள் மற்றுமுள்ள காலி யிடங்கள் எல்லாவற்றிலும் மரங்களை வளர்க்கவும் இரண்டாந் திட்டக் காலத்திலேயே இத்திட்டம் புகுத் தப்பட்டது. ரூபாய் 2.50 லட்சம் செலவில் 1960-61-ல் செங்கல்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் 2,530 ஏக்கரா பரப்பில் மரம் நடும் முன்னோடித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

மூன்றாந் திட்டக் காலத்தில் சமுதாய நல வளர்ச்சி, தேசிய நலப் பரப்புப் பணி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் ஆண்டுதோறும் 100 ஏக்கரா தரிசு நிலத்தில் காடு வளர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மொத்தம் 1·17 லட்சம் ஏக்கரா நிலப்பரப்பு இத்திட்டத்தின் கீழ் வரக்கூடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இத்திட்டத்திற்கு ஏக்கரா ஒன்றுக்கு ரூ. 85 செலவாகும். சில வட்டாரங்களில் பொருத்த மான நிலப்பரப்பு இல்லாதிருக்கக் கூடும். சில இடங்களில் வேலை நிறைவேறுவதில் தாமதம் நேரிடக்கூடும். இவற்றையெல்லாம் நோக்குமிடத்து, இந்த வேலைத் திட்டத்திற்கு ரூ. 100 லட்சம் செலவு போதும் என்று தோன்றுகிறது.

**2. பொருளாதாரச் சிறப்புள்ள மலைத் தோட்டங்கள்.**

இந்தத் திட்டத்தில் மலைத் தோட்டங்களும், திலப் பரப்புக் காடுகளும் அடங்குகின்றன. மலைத் தோட்டங்களில் தேக்கு, மூங்கில், வெட்டுமர வகைகள், சவுக்கு, வாட்டில், கர்ப்பூர மரம், முந்திரி, மென் மரங்கள் ஆகியவை நடப்பட்டுள்ளன. தேக்கு போன்ற வாணிப முக்கியத்துவம் வாய்ந்த மரங் களைப் பெருக்க வேண்டியது இன்றியமையாதது ஆகும். அப்போதுதான், வளர்ந்து வரும் கட்டிட வேலைகளுக்குத் தேவையான வெட்டு மரம் எளிதில் கிடைக்கும். மேட்டுப் பாளையத்திற் கருகே தேக்கு நடப்பட்டுள்ளது. இதற்காக ஹள்ளூர், ஹள்ளா விற்குக் குறுக்கே கல்லணை கட்டிக் கால்வாய் மூலம் தண்ணீர் அனுப்பப்படுகிறது. பாசன நிலைகளிலும் தேக்கு நடப்படுகிறது.

இரண்டாந் திட்ட முடிவிற்குள் தேக்கு 4,742 ஏக்கர் பரப்பிலும், பாசனத் தேக்கு 597 ஏக்கர் பரப் பிலும், மூங்கில் 464 ஏக்கர் பரப்பிலும், வெட்டு மர வகைகள் 230 ஏக்கர் பரப்பிலும் நடப்பட்டிருக்கும். இத்திட்டத்திற்குச் செலவு ரூ. 9·60 லட்சம்.

அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் பொருள் களில் முந்திரி தலை சிறந்து விளங்குகிறது. வாசனைப் பொருள்கள் விசாரணைக் குழுவின் சிபாரிசுகளுக்கு ஒப்ப முந்திரி பயிரிடும் திட்டம் தயாரிக்கப்பட்டது. வெளிநாட்டு ஏற்றுமதிக்கும், நம் நாட்டில் வளர்ந்து வரும் தேவைக்கும் முந்திரிப் பயிரை அதிகரிக்கச் செய்ய வேண்டியது அவசியமாகிறது. முந்திரி மரத்தின் பயனும் அதிகம். முந்திரிப் பருப்பு, முந்திரி ஓட்டு எண்ணெய், முந்திரிப் பழம், விறகு ஆகியவை நமக்குக் கிடைக்கின்றன. மேலும், முந்திரி மரங்கள் மிக விரைவாக வளர்வதால், பொட்டல்

காடுகளைச் சீக்கிரத்தில் வளம் நிறைந்ததாக்க முடிகிறது. இரண்டாந் திட்டக் கால முடிவுக்குள் 47,280 ஏக்கராக்களில் முந்திரி பயிராக்கப் பட்டிருக்கும். இத்திட்டத்திற்குச் செலவு ரூ. 28.46 லட்சம்.

தோல் பதனிடுதல், காகிதம் செய்தல், ரயான் உற்பத்தி ஆகியவற்றிற்கு வாட்டில் மிக முக்கியமான மூலப்பொருள். இம்மரத்தின் கட்டை எரி பொரு ளாகவும் பயன்படுகின்றது. தோல் பதனிடு தொழி லுக்குத் தேவையான "டானின்" என்ற நிறமற்ற பொருள், நன்கு முதிர்ந்த வாட்டில் மரப்பட்டை களிலிருந்து தயாரிக்கப்படுகிறது. பொதுவாக இந்தியாவில், சிறப்பாகத் தமிழ் நாட்டில் தோல் பதனிடு பொருள் பற்றுக்குறையாக இருக் கின்றது. அதனுல், ஏராளமான அளவில் வாட்டில் பட்டைகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இதனுல் அந்நியச் செலவாணி செலவாகிறது.

தக்க இடங்களில் வாட்டில் வளர்க்க முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் முயற்சி செய்யப் பட்டது. இரண்டாந் திட்டக் காலத்தில் அதிக அளவில் வளர்க்கப்பட்டு வருகின்றது. இவற்றி லிருந்து கிடைக்கும் வாட்டில் மரப்பட்டைகள் தோல் பதனிடு தொழிலின் தேவையை ஓரளவு நிறை வேற்றும். அந்த அளவுக்கு இறக்குமதியும் குறையும். இந்த மரப்பட்டை விற்பது மூலமாக இந்த மாநிலத் திற்குக் கணிசமான வருவாய் கிடைக்கும்.

வாட்டில் மரத்திலிருந்து "டானின்" கிடைப் பதுடன், அதன் கட்டை எரி பொருளாகவும் பயன் படுகின்றது. இம்மரத்தின்கூழ், காகிதத் தொழி லுக்கும், ரயான் தொழிலுக்கும் பயன்படும்.

கர்ப்பூர மரமும் மிக வேகமாக வளரும். இதன் கட்டை எரிபொருளாகப் பயன்படும். இதன் இலைகளிலிருந்து மருந்துப் பொருளாகிய கர்ப்பூரத் தைலம் வடிக்கப்படுகிறது. இம்மரத்தின் கூழும், காகிதத் தொழிலுக்கும் ரயான் தொழிலுக்கும் பயன் படும். மின்சாரம் அனுப்புவதற்கு வேண்டிய கம்பங் களும் இம்மரத்திலிருந்து கிடைக்கின்றன. தொழிலில் தன்னிறைவு பெறுவதற்கு மட்டுமல்லாமல் காட்டு வளத்தைப் பெருக்கவும் இம்மரங்களை வளர்க்க வேண்டும். இதுவரை 2,026 ஏக்கரா பரப்பளவில் இம்மரங்கள் வைக்கப்பட்டுள்ளன. வாட்டில், கர்ப்பூர மரம் நடும் இத்திட்டத்திற்குச் செலவு ரூ. 20.24 லட்சம்.

கடற்கரைகளிலும் ஆற்றங் கரைகளிலும் மட்டுமே மணல் மேடுகள் இருக்க வேண்டும். அக்கம்பக்கத் திலுள்ள விலை மதிப்புள்ள வேளாண்மை நிலங்களில் மண் அடித்து வந்து மூடிவிடாமல் பாதுகாக்க வேண்டும். இதன் பொருட்டுக் கடற்கரைகளிலும், ஆற்றங் கரைகளிலும் சவுக்கு வளர்க்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு சவுக்கு வளர்க்கப் படுவதனால், மண்வளம் பாதுகாக்கப்படுவதுடன், நகரப் புறங்களுக்கு வேண்டிய விறகும் கிடைக்கும். இதுவரை 2,371 ஏக்கரா பரப்பில் சவுக்கு வளர்க்கப் பட்டுள்ளது. இரண்டாந் திட்டக் கால முடிவுக்குள் 3,171 ஏக்கர்களில் சவுக்கு வளர்க்கப்படும். இத் திட்டத்திற்குச் செலவு ரூ. 4·87 லட்சம்.

நமது மாநிலத்திலுள்ள மென்மர ஆதாரம், வளர்ந்து வரும் தீக்குச்சித் தொழிலின் தேவையை நிறைவேற்றும் வகையில் இல்லை. எனவே, மென் மர வகைகளை அதிக அளவில் வளர்க்க வேண்டுவது இன்றியமையாததாகிறது. இதுவரை 6,017 ஏக்கரா

பரப்பில் மென் மரங்கள் வைக்கப்பட்டுள்ளன. இரண்டாந் திட்டக்கால இறுதிக்குள் 7,881 ஏக்கரா பரப்பில் மென் மரங்கள் வளர்க்கப்படும். இத்திட்டத்திற்குச் செலவு ரூ. 6·65 லட்சம்.

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், முந்திரி 10,000 ஏக்கர்களிலும், தேக்கு 5,500 ஏக்கர்களிலும், மென் மரங்கள் 5,000 ஏக்கர்களிலும், சவுக்கு 3,000 ஏக்கர்களிலும், வாட்டில் 20,000 ஏக்கர்களிலும், ரப்பர் 2,000 ஏக்கர்களிலும், மூங்கில் 5,000 ஏக்கர்களிலும் வளர்க்கப்படும். இவைகளுக்காக ரூ. 65 லட்சம் செலவழிக்கப்படும். இரண்டாவது திட்டக் காலச் செலவு ரூ. 70 லட்சம்.

### 3. நலப்பரப்புக் காடுகள்.

ஆற்றங்கரைப் பகுதிகளிலும், தாழ்மட்ட ஏரிப் பகுதிகளிலும் மரங்கள் இல்லாத காரணத்தால், ஆறுகளும் ஏரிகளும் மண்மேடிட்டன. ஆகவே, ஆறு, கால்வாய், ஏரிக் கரைகளில் காடு வளர்க்கத் தீர்மானிக்கப்பட்டது. ஆற்றுப் பகுதிகளின் அடிமட்டத்தில் இயற்கையாகத் தண்ணீர் இருக்கும். ஆகையினல், இப்பகுதிகளில் தண்ணீருக்குப் பஞ்சமில்லை. தக்க இடங்களில் தேக்கு நன்கு வளர்க்கப்பட்டு வருகின்றது. இம்மரங்கள் நிலை பெற்றதும் மண் அரிப்பு ஏற்படுவது நின்று போகும். அத்துடன் நமது மாநிலத்தின் வெட்டு மர வளமும் பெருகும். இதுவரை காவிரிக் கரையில் 2,735 ஏக்கர் பரப்பிலும், தாம்பிரபரணிக் கரையில் 311 ஏக்கர் பரப்பிலும் தேக்கு நடப்பட்டுள்ளது. இரண்டாந் திட்டக் கால இறுதிக்குள் 3,846 ஏக்கர் பரப்பில் தேக்கு நடப்பட்டிருக்கும். இத்திட்டத்திற்குச் செலவு ரூ. 10·06 லட்சம்.

மூன்றாந் திட்டக் காலத்தில் ஆறு, கால்வாய், ஏரிக் கரைகளில் 4,000 ஏக்கர் பரப்பில் மரங்கள் நடப்படும். ரூ. 30 லட்சம் செலவிடப்படும். இத்திட்டத்துடன் இன்னொன்றும் இணைக்கப்பட்டுள்ளது. அதாவது, இருப்புப் பாதை ஓரங்களின் நெடுக மரங்கள் வைத்து வளர்க்கப்படும். இம்மரங்களைக் கண் காணித்து வருவது குறித்து ரெயில்வே நிர்வாகத்துடன் ஏற்பாடு செய்து கொள்ளப்படும்.

### 4. காடுகளை ஒருங்கிணைத்தல்.

வனத் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட முன்னாள் ஜமீன் காடுகளின் எல்லைகள் சரிவரக் குறிப்பிடப் பெற்றிருக்கவில்லை. இதனால், எல்லை மீறுதல்களும் பாதுகாப்புச் சிக்கல்களும் எழுந்தன. இக்காடுகள் சக்திக்கு மீறிய அளவில் பயன்படுத்தப்பட்டு வந்ததால், அழிந்து போய்க் காணப்பட்டன. எல்லை குறித்த பின்னரே இவை சரியான கண்காணிப்பின் கீழ் வந்தன. இவ்வாறு இக்காடுகளை அளவிட்டு எல்லை குறிக்கும் பணி இரண்டாந் திட்டக் கால நான்காம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டது. இரண்டாந் திட்டக் காலத்தில் ரூ. 1·29 லட்சம் செலவிடப்படும். புறம்போக்கு இடங்களில் மரம் நடப்பட்டு வருகின்றது. மூன்றாந் திட்டக் காலத்தில் 532 சதுர மைல் காடுகளை அளந்து எல்லை குறிப்பிட்டு வளர்ச்சி பெறச் செய்ய ரூ. 10 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 5. வன வளத்தை அளவிடுதல்.

தொழில் நுணுக்கப் பொருளாதார அளவீட்டுக் குழு, அண்மையில் அறிக்கை சமர்ப்பித்தது. அதற்கு வனவளம் பற்றி இத்துறை தந்துதவிய புள்ளி

விவரங்கள் உதவியாய் இருந்தன. இனி, சிறப்பாக, காடுபடு சிறு பொருள்கள் பற்றி ஆராய்ந்து அளவிட மூன்றாந் திட்டக் காலத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆகவே, அளவிடும் பணியில் முழு நேரமும் ஈடுபட்டுள்ள குழுக்களை அமைத்து, மாநிலம் முற்றும் அளவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 3 லட்சம் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 6. அழிந்த காடுகளைப் புதுப்பித்தல்.

முன்னாள் பஞ்சாயத்துக் காடுகளும், முன்னாள் ஜமீன் காடுகளும் கவனிப்புக் குறைவினாலும், வரையறையின்றி மரம் வெட்டப்பட்டதாலும். அழியும் நிலைக்கு வந்து விட்டன. இவற்றில் மீண்டும் மரங்கள் வைத்து வளர்த்து, முன் போலவே நல்ல காடுகளாக மாற்ற வனத்துறையினர் மேற்கொண்ட மிக முக்கியமான திட்டங்களில் இதுவும் ஒன்றாகும். மண் அரிப்பைத் தடுப்பதும், இம்மாநிலத்தின் எரிபொருள் ஆதாரத்தைப் பெருக்குவதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

முன்னாள் பஞ்சாயத்து, முன்னாள் ஜமீன் காடுகளின் குன்றுப் பகுதிகளிலிருந்த மரங்கள் அண்மைக் காலங்களில் அழிக்கப்பட்டதால் இக்காடுகள் பொட்டலாயின. கீழ்ப் பகுதியிலுள்ள வேளாண்மை நிலங்கள் நஷ்டமடையாமலும், மண் அரிப்பு ஏற்படாமலும் இருக்கவேண்டுமானால் இக்குன்றுப் பகுதிகளில் மண் வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும். எனவே, மண் அரிப்பைத் தடுக்கவும், எரி பொருள் வளர்ச்சிக்காகவும் இப்பகுதிகளில் விறகு மரங்கள் நடப்பட்டுள்ளன. இதுவரை

13,246 ஏக்கர்களில் விறகு மரங்கள் நடப்பட்டுள்ளன. இரண்டாந் திட்டக்கால இறுதிக்குள் 15,683 ஏக்கர்களில் விறகு மரங்கள் நடப்பட்டிருக்கும். இத்திட்டத்திற்குச் செலவு ரூ. 8·23 லட்சம். மூன்றுந் திட்டக்காலத்தில் 18,000 ஏக்கர்களில் மரங்கள் நட ரூ. 7 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 7. மேய்ச்சல் தரை, புல்வெளி வளர்த்தல்.

செங்கற்பட்டு மாவட்டத்தின் முன்னுள் பஞ்சாயத்துக் காடுகள் அழிந்த நிலையில் உள்ளன. அவற்றைப் பாதுகாத்து மேய்ச்சல் ஆதாரமாகவும், விறகு மரக் காடாகவும் வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கம். இங்கு வானம் பார்த்த நிலையிலும், பாசன நிலையிலும் தக்க இடங்களில் புல் வெளிகள் வளர்க்கப்படும். இதுவரை 10,411 ஏக்கரா பரப்பில் மரவகைகளும், 119 ஏக்கரா பரப்பில் தீனிப் புல் வகைகளும் வளர்க்கப்பட்டுள்ளன. இரண்டாந் திட்டக் கால இறுதிக்குள் 11,151 ஏக்கரா பரப்பு வளர்ச்சி பெற்று விடும். இத்திட்டத்திற்குச் செலவு ரூ. 12·12 லட்சம். மூன்றுந் திட்டக் காலத்தில் 18,000 ஏக்கர்களில் மேய்ச்சல் தரை வளர்க்க ரூ. 5 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

விலங்குச் செல்வங்கள் நன் முறையில் வளர்ந்து செவ்விய பலன்தர வேண்டுமென்றால், நாட்டில் அவற்றுக்கு வேண்டிய தீனி, ஆதாரங்களையும், மேய்ச்சல் தரைகளையும் வளர்ச்சியடையச் செய்ய வேண்டுவது இன்றியமையாதது என்று, திட்டக் கமிஷன் வலியுறுத்தியுள்ளது. இந்தக் கொள்கையை ஒட்டி, ஒதுக்கக் காடுகளிலுள்ள நீர்நிலைகள் சீர்திருத்தம் செய்யப்படுகின்றன. இதுவரை 9,591 ஏக்கர்களில்

புல் வளர்க்கப்பட்டுள்ளது. இரண்டாந் திட்டக்கால இறுதிக்குள் 12,160 ஏக்கர்களில் புல் வளர்க்கப்படும். மூன்றுந் திட்டக் காலத்தில் 5,000 ஏக்கர்களில் புல் வளர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 8. வன விலங்குகள் பாதுகாப்பு.

தேசிய வனவளக் கொள்கையை ஒட்டி இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஏராளமான அளவில் வேட்டையாடிக் கொல்லப்படுவதால் அருகிவரும் வனவிலங்குகளுக்கும், ஏனைய வனவிலங்குகளுக்கும் பாதுகாப்பு அளிக்க இது வகை செய்கிறது. முதுமலையில் வனவிலங்குப் புகலிடம் ஒன்று வளர்ச்சி பெற்று வருகின்றது. இம் முதுமலைக் காடு கண்கவர் இயற்கைக் காட்சிகள் நிறைந்த மேற்குத் தொடர்ச்சி மலையில் 120 மைல்களுக்குப் பரந்து விரிந்து உள்ளது. இப்புகலிடம் நம் நாட்டிலுள்ள வன விலங்குகளைப் போற்றிப் பாதுக்காக்கத் துணை புரியும். வன விலங்குகள் நீர் குடிக்கத் தண்ணீர்த் தொட்டிகளும், அவை உப்புத் துண்டுகளை நக்குமிடங்களும், விலங்குகளைப் பார்வையிடும் மேடைகளும், சுற்றுப் பயணக்காரர்கள் தங்கும் விடுதியும் கட்டப்பட்டுள்ளன. இரண்டாந் திட்டக் காலத்தில் ஓர் இளைப்பாறு விடுதியும், 10 பார்வையிடு மேடைகளும், 30 விலங்குகள் உப்புத்துண்டுகளை நக்குமிடங்களும் கட்டச் செலவு ரூ. 4·84 லட்சம்.

இரண்டாந் திட்டக் கால முதல் நான்காண்டுகளில் கார்குடி-முதுமலை, தேப்பக்காடு-பொலிங்குடி பாதைகளும், ஒன்றெட்டி வண்டிப்பாதையும் அமைக்கப்பட்டன. கார்குடி-முதுமலை, முதுமலை-பென் பாதைகளுக்குச் சரளைக்கல் போடப்பட்டது. கீழார் குடியில்

இளைப்பாறு விடுதி ஒன்று கட்டப்பட்டது. தண்ணீர் தொட்டிகள், விலங்குகள் உப்புத் துண்டுகளை நக்கு மிடங்கள், பார்வையிடுவதற்கான மேடைகள் முதலிய பலவகை வேலையினங்கள் செய்து முடிக்கப்பட்டன. இந்த ஆண்டு ரூ. 1·13 லட்சம் செலவில் புதுப்பாதை களும் மற்ற வளர்ச்சி வேலைகளும் மேற்கொள்ளப் படும்.

இவ்வாறே, செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த வேடந்தாங்கலிலுள்ள ஒதுக்கப்பட்ட காடுகளில் பறவைப் புகலிடம் ஒன்று வளர்ச்சியடைந்து வருகின் றது. இங்குப் பலவகைப்பட்ட பறவையினங்கள் மனங் கவர் இயற்கைச் சூழலில் காண்போர் நெஞ்சை யள்ளுகின்றன.

இப்பொழுது நம்முடைய மாநிலத்தில், இயற்கை யெழிலை நுகர்வதில் ஆர்வங் கொண்டோரையும், சுற்றுப் பயணக்காரர்களையும் ஈர்க்க வல்ல இவ்விரண்டு புகலிடங்களே உள்ளன. ஆகவே, வனவிலங்குகளைப் பாதுகாத்துக் கண்களுக்கும், உள்ளத்துக்கும் விருந்தளிக்கும் வகையில் மூன்றாந் திட்டக் காலத்தில் வேறு புகலிடங் களையும் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி, கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த உயிந்தி பள்ளத்தாக்கில் ஒன்றும், திருநெல்வேலி மாவட் டத்தைச் சேர்ந்த முண்டந்துறையில் ஒன்றுமாக இரண்டு புகலிடங்கள் அமைக்கப்படும்.

தற்போது நமது மாநிலத்தில் விலங்குக் காட்சிச் சாலை ஒன்றுதான் உள்ளது. சென்னையில் நெருக்கம் மிக்க இடத்தில் அது அமைந்துள்ளது. அது 15 ஏக்கர் பரப்பில், மேலும் விரிவடைவதற்கு வகை

யின்றி இருக்கின்றது. இந்தியாவிலுள்ளது மிகப் பழைய விலங்குக் காட்சிச் சாலைகளில் இதுவும் ஒன்று. இது இன்னும் நவீன முறைகளில் முன்னேற்றமடையச் செய்ய வேண்டியுள்ளது. மூன்றாந் திட்டக் காலத்தில் மேலும் இரண்டு விலங்குக் காட்சிச் சாலைகளை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இருபெரு நகரங்களிலும் அவை அமைக்கப்படும். மூன்றாந்திட்டக் காலத்தில், இரண்டு புகலிடங்களும், இரண்டு விலங்குக் காட்சிச் சாலைகளும் நிறுவ ரூ. 10 லட்சம் செலவாகும்.

## 9. அரக்கு உற்பத்தி.

மிகப் பழங் காலத்திலிருந்தே அரக்கு இயற்கையாக இந்தியாவில் விளைந்து வருகின்றது. உலகத்திலுள்ள அரக்கு உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியா ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. அந்நியச் செலவாணி பெற்றுத் தரும் வாய்ப்பும் இதற்குள்ளது. ஆயின், தமிழ்நாட்டில் பெருமளவு உற்பத்தி செய்யப்படவில்லை. அதனால் இரண்டாந் திட்டத்தில் அரக்கு உற்பத்திக்கு அக்கறை காட்டப்பட்டது. மதுரை மாவட்டத்திலுள்ள வண்ணாத்திப் பாறை பள்ளத்தாக்கிலும், சேலம் மாவட்டத்திலுள்ள ஹொசூரிலும் அரக்குத் தயாரிக்கப்படுகிறது. இரண்டாந் திட்ட முடிவுக்குள் நமது மாநிலத்தில் 9 அரக்குப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதுடன், 190 ஏக்கர் பரப்பில் அரக்குப் பற்றும் மரங்கள் நடப்பட்டிருக்கும். இத்திட்டச் செலவு ரூ. 2·26 லட்சம். மூன்றாந் திட்டக் காலத்தில் 5 அரககுப் பண்ணைகள் ஏற்படுத்த

வும், 500 ஏக்கர் பரப்பில் அரக்குப் பற்றும் மரங்கள் நடவும் ரூ. 3 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 10. வெட்டுமரம் எடுத்தல்.

காஷ்மீர் இமயமலைப் பகுதிகளில் அண்மையில், உணவு வேளாண்மை நிறுவன வல்லுநர்கள் செய்து காட்டிய காட்சிகளிலிருந்து, கையினால் தயாரிக்கப் பெற்ற முன்னேற்றச் சாதனங்களினால் வெட்டு மரங்களை வெட்டியெடுப்பதில் நல்ல பலன் ஏற்படும் என்பது நிரூபணமாயிற்று. திருந்திய உபகரணங்களினாலும் செவ்விய முறையில் மரம் வெட்டிக் கொண்டு வர இயலும். இவ்வாறு முன்னேற்ற முறையில் மரம் வெட்டவும், காடுகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் மூன்றாவது திட்டக் காலத்தில் ரூ. 3 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 11. பயிற்சியும் பணியாளரும்.

மூன்றாந் திட்டக் காலத்தில் நிறைவேற்றப்படவிருக்கும் **பண்ணைக்காடு வளர்ப்புத்** திட்டம் சீரிய வெற்றிபெற உரிய அலுவலாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். அதன் பொருட்டு 14 கெஜட் பதிவு பெற்ற அதிகாரிகளுக்கும், 48 ரேஞ்சர்களுக்கும், 192 காட்டுக் காவலர்களுக்கும், 576 காட்டுக் கண்காணிப்பாளர்களுக்கும் பயிற்சி தர வேண்டியிருக்கும். இவர்களது நிர்வாகத்திற்காக மூன்றாந் திட்டக் காலத்தில் ரூ. 8 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வனத்துறையின் செலவினங்கள் பெருகி வருவதால், அவற்றைச் சரிவர நிர்வகிக்க ஒரு தனிக் கணக்குப் பிரிவு இருப்பது அவசியமாகிறது. வரவு

செலவுத் திட்டம் தயாரித்தல், மத்திய அரசாங்கத்தின் நிதியுதவி பற்றி நிர்ணயித்தல் முதலான காரியங் களுக்கும் இது அனுகூலமாக இருக்கும். அதனால், தக்க துணை அலுவலாளர்களுடன் ஒரு கணக்கு அதிகாரியைத் தலைமை கன்சர்வேட்டர் அலுவலகத் தில் நியமிக்க, மூன்றாந் திட்டக் காலத்தில் ரூ. 1 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 12. ஆராய்ச்சி நிலையம்.

அழிந்த காடுகள் மீண்டும் தாமாகவே வளர்தல் அரிது; காடுகளை வளர்க்க மனிதனது முயற்சி தேவை யாகும். காடுகளைப் பயன்தரும் முறையில் வளர்த் துப் பேணுவதற்குத் தக்க ஆராய்ச்சி வேண்டும். குறைந்த செலவில் நிறைந்த பயன் தரக்கூடிய வளர்ப்பு முறைகளை வளர்த்தலும், பயனுள்ள வகை களை வீணாக்காமல் பயன் படுத்தும் முறைகளை இயற் றலும் காட்டாராய்ச்சியின் நோக்கங்களாகும்.

காற்றினால் மண் அரிப்பு ஏற்படுவதை ஆராயவும், அதைத் தடுக்கவும் இராமேஸ்வரத்தில் ஓர் ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டுள்ளது. இவ்வாராய்ச்சி 150 ஏக்கராக்களில் மேற்கொள்ளப்படும். மண் அரிப்பு ஏற்படுவது முழுதும் கட்டுப்படுத்தப்படும். ஆராய்ச்சி நிலையம் செயலாற்றி வருகின்றது. இரண்டாந் திட்டக் காலச் செலவு ரூ. 23 ஆயிரம்.

நமது மாநில வனச் செல்வ ஆராய்ச்சியாளர் இன்று, சிறந்த பலவித மர வகைகளை வெற்றிகரமாகப் பெருக்குவது பற்றி ஆராய்ந்து வருகின்றனர். இவ் வித நுட்ப ஆராய்ச்சியின் அவசியத்தை அரசியலார் நன்கு உணர்ந்துள்ளனர். ஆகவே, வாட்டில் பற்றிக் கோடைக் கானலிலும், மண் அரிப்பு ஏற்படுவதைத்

தடுப்பது குறித்து இராமேஸ்வரத்திலும் ஆராய்ச்சி நடத்த அனுமதித்துள்ளனர். மூன்றாந் திட்டக் காலத்தில் ரூ. 3 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 13. போக்குவரத்து வசதி.

காட்டுப் பொருள்களை எளிதில் நாட்டுக்குக் கொண்டு வருவதற்கும், காடுகளை அடிக்கடி சென்று காண்பதற்கும் நல்ல போக்குவரத்துப் பாதைகள் வேண்டும். இரண்டாந் திட்டக் காலத்தில் 31 மைல் 5 பர்லாங்கு அளவுக்குப் புதுப் பாதைகள் போடப்பட்டன ; 4 மைல் 2 பர்லாங்கு அளவுக்குப் பாதைகள் சீர்திருத்தப் பட்டன ; 26 மைல் 6 பர்லாங்கு அளவுக்குப் பாதைகள் ஒழுங்கு படுத்தப்பட்டன. திட்டக் காலச் செலவு ரூ. 5·91 லட்சம். மூன்றாந் திட்டக் காலத்தில் 80 மைல் அளவுக்குப் புதுப் பாதைகளும் 120 மைல் அளவுக்கு வண்டிப் பாதைகளும் அமைக்க ரூ. 12 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 14. கட்டிடங்கள்.

முன்னாள் பஞ்சாயத்துக் காடுகளும், முன்னாள் ஜமீன் காடுகளும் வனத்துறையினரின் சீரான பாதுகாப்பின்கீழ் வந்த பின்னர் மிகுந்த அளவில் மரங்கள் நடும் திட்ட வேலை மேற்கொள்ளப்பட்டது. இது போன்ற முன்னேற்றப் பணிகளைச் செம்மையான முறையில் நிறைவேற்ற, ஊழியர்களுக்குக் காடுகளில் இல்லங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டியது அவசியமாகிறது. அண்மைக் காலம் வரை நமது மாநிலத்தின் பல காடுகளில் மேற்பார்வைப் பிரிவுகள் இல்லாமல் இருந்தன. இரண்டாந் திட்டக் காலத்தில் வளர்ச்சித் திட்டங்களில் ஈடுபட்ட பாதுகாப்பு

அலுவலாளர்களுக்கு மட்டுமே வீடுகள் கட்டித் தரப் பட்டன. இதுவரை 71 இல்லங்கள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. காடுகளின் உட்புறப் பகுதிகளில் வேலை பார்க்கும் பணியாளர்களுக்கு இந்த ஆண்டில் 40 குடியிருப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். இரண்டாந் திட்டக் காலத்தில் செலவு ரூ. 6·86 லட்சம். மூன்றுந் திட்டக் காலத்தில் வீடுகள் கட்டித் தரும் திட்டத்திற்கு ரூ. 10 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 15. தொழிலாளர், பணியாளர் வசதி.

வன வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்படும் இடத்திற்கும், தொழிலாளர் உள்ள இடத்திற்கும் இடையில் நெடுந் தொலைவு விரிந்துள்ளது. மேலும், காட்டுப் பகுதிகளிலும் நிழலும் நீரும் கிடைப்பது அருமை. சுகாதாரக் கேடுள்ளனவாகவும் அவை விளங்குகின்றன. ஆகவே, தொழிலாளர்களைக் கொண்டு செல்ல லாரி வசதியும், நண்பகலில் அவர்கள் இளைப்பாற வசதிகளும் செய்து தரப்பட வேண்டும். அவர்கள் எடுத்துச் செல்ல வேண்டிய உபகரணங்களுக்கும் வண்டி வசதி வேண்டும். இவைகளுக்காக மூன்றுந் திட்டக் காலத்தில் ரூ. 5 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 16. வனப் பாதுகாப்பு.

தற்பொழுது சேலம், மதுரை வட்டங்களில் இரண்டு நடமாடும் வட்டக் குழுக்கள் இருக்கின்றன. வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஒன்று இருக்கின்றது. காட்டுப் பாதுகாப்பில் இவை திறனுடன் செயலாற்றுகின்றன. காடுகளைக் கண்காணித்து முன்னேற்ற

நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறச் செய்ய இம் மாதிரி இயங்கு குழுக்கள் இனியும் செயலாற்றும். மூன்றாந் திட்டக் காலத்தில் இந்நடவடிக்கைகளுக்கு ரூ. 5 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.


### 17. மண் வளப் பாதுகாப்பு.

மண் வளப் பாதுகாப்புத் திட்டத்தில் இரண்டு திட்டங்கள் அடங்கியுள்ளன. ஒன்று, விறகு மரக் காடு வளர்த்தல். இரண்டு, ஒதுக்கப்பட்ட காடுகளுக்குப் புறம்பேயுள்ள மண் அரிப்புண்ட நிலங்களைப் பூர்வாங்கமாக அளவிடுதல்.

மிகவும் அழிக்கப்பட்ட நிலையிலுள்ள முன்னாள் பஞ்சாயத்துக் காடுகளில் விறகுமர வகைகளும், தீனி மர வகைகளும் வைத்துப் பயிராக்கி, மீண்டும் அவற்றை நல்ல காடுகளாக்குவதே இத்திட்டத்தின் நோக்கம். அப்போதுதான் மண் அரிப்பு ஏற்படுவது தடுக்கப்படுவதுடன், மண் வளமும் பாதுகாக்கப்படும். அண்டை அயலிலுள்ள வேளாண்மை நிலங்களும் பாதுகாப்புப் பெறும். இம்மரங்கள் வளர்ந்து முதிர்ந்ததும், நமது மாநிலத்தின் விறகுத் தேவை நிறைவெய்துவதுடன், படிப்படியே ஆந்திர மாநிலத்திலிருந்து விறகு இறக்குமதியாவதும் குறைந்து போகும். இரண்டாந் திட்டக் காலத்தில் ரூ. 23·88 லட்சம் செலவில், செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் 61,576 ஏக்கராக்களில் காடு வளர்க்கப்படும். இதுவரை 50,146 ஏக்கரா பரப்பில் காடு வளர்க்கப்பட்டுள்ளது. மூன்றாந் திட்டக் காலத்தில் 76,000 ஏக்கர்களில் காடு வளர்க்க ரூ. 40 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஒதுக்கப்பட்ட காடுகளுக்கு வெளியேயுள்ள மண் அரிப்புண்ட நிலங்களையும், மேய்ச்சல் தரை வளர்ப்புக்கு ஏற்றவையாய் மாற்ற முயற்சி யெடுக்கப் பட்டு வருகிறது. அதற்காக அவை பூர்வாங்கமாக அளவிடப்படும். இந்நிலங்கள் மேய்ச்சல் தரை களாகவும், விறகு மரக் காடுகளாகவும் வளர்ச்சி பெறும். இவ்வாறு அளவிடும் பணி இதுவரை, செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் முடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களில் மேற் கொள்ளப்படும்.

தமிழ்நாடு அரசாங்கத்திற்காக, தமிழ் நாடு எழுது பொருள் அச்சுத் தொழில் கட்டுப்பாட்டு அதிகாரியால் பதிப்பிக்கப்பட்டுப் பிரசுரிக்கப் பட்டது.


செய்தித் துறை